### திருவண்ணாமலை தெற்கு – வடக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்! தட்கல் முறையில் பணம் செலுத்திய

# 60ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு உடனடியாக மின்இணைப்பு வழங்கிடுக!

## முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு, தீர்மானங்களை விளக்கி சிறப்புரை!

**திருவண்ணாமலை, செப்.7-**

**தமிழ்நாட்டில் தட்கல் முறையில் பணம் செலுத்தி மின்இணைப்புக்காக காத்திருக்கும் விவசாயிகள், சாதாரணமாக மின் இணைப்பிற்காக காத்திருக்கும் விவசாயிகள் என 60ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு இந்த த.வெ.க. அரசு உடனடியாக மின்இணைப்பை வழங்கிட வேண்டுமென இந்த மாவட்டக் கழகம் வலியுறுத்துகிறது என பல்வேறு தீர்மானங்கள் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. தீர்மானங்களை விளக்கி, முன்னாள் பொதுப் பணித்துறை அமைச்சரும், சட்ட மன்ற தி.மு.க. கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் சிறப்புரையாற்றினார்.**

04.09.2026 வெள்ளிக்கிழமை காலை மாவட்டதிமுகஅலுவலகத்தில், திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன் தலைமை வகித்தார்.

முன்னாள் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., வடக்கு மாவட்ட அவைத் தலைவர் இரா.ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு, முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சரும், சட்டமன்ற திமுக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

முன்னதாக தலைமைக் கழக பிரதிநிதிகள் சி.வி.எம்.பி.எழிலரசன், டாக்டர் பி.எம்.யாழினி ஆகியோர் கருத்துக்கள் வழங்கி உரையாற்றினர்.

திருவண்ணாமலை வடக்கு, தெற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாட்டிலேயே நிலத்தடிநீர் மிகவும் அபாயகரமான நிலையில் உள்ள மாவட்டமாக, திருவண்ணாமலை மாவட்டம் உள்ளது. நிலத்தடிநீர்மட்டம் 700அடிக்கும் கீழே உள்ளது. மாவட்டம் முழுவதும் குடிநீர் வழங்கி வந்த நீர்நிலைகள் நீரின்றி வறண்டுபோய் உள்ளது. இதனால் மாவட்டத்தில் குடிநீர் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. மாவட்ட தலைநகர் திருவண்ணாமலைக்கு இலட்சக்கணக்கான ஆன்மீகப் பெருமக்கள் வருகையினால் குடிநீர் தேவை அதிகரித்துள்ளது. குடிநீருக்காக போராடுகிற மக்களைப் பற்றி கவலைப்படாமலும், எந்த நடவடிக்கையும் எடுக்காத தவெக அரசை இந்த மாவட்டக் கழகம் வன்மையாக கண்டிக்கிறது.

ஆகஸ்ட் 22 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற கழக செயற்குழுக் கூட்டத்தில், கழக மறுசீரமைப்பில் இளைஞர்கள், ஆதிதிராவிடர்கள், பெண்கள் ஆகியோருக்கு அதிக அளவில் கழக பொறுப்புகள் வழங்கப்படும் என நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இந்த மாவட்டக் கழகம் நன்றியினையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

மேற்கண்ட தீர்மானம் நிறைவேறிட காரணமாக இருந்த கழகத் தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழக பொதுச் செயலாளர், பொருளாளர், துணைச் செயலாளர்கள் மற்றும் எதிர்கட்சித் தலைவர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இந்த மாவட்டக் கழகம் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

கடந்த மூன்று மாதங்களாக யாருடைய தூண்டுதலுமில்லாமல், தமிழகம் முழுவதும் வாழ்வாதாரம் இல்லாத காரணத்தினாலும், டெல்டா பகுதிகளில் குறுவை சாகுபடி முழுமையாக பாதிக்கப்பட்டதாலும், தன்னெழுச்சியாக போராடிவரும் விவசாயிகளுக்கு, முழுமையாக விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென இந்த அரசை, மாவட்டக் கழகம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

01.09.2026 தமிழ்நாடு சட்டப்பேரவையில் திருவண்ணாமலை மலையடிவாரப் பகுதிகளில் குடியிருப்போர்களுக்கு, சட்டமன்றத்தில் குரல் கொடுத்து, அவர்கள் தங்கள் குடியிருப்புகளில் தொடர்ந்து வசித்திட பாதுகாப்பு பெற்றுத்தந்த முன்னாள் அமைச்சரும், கழக கொறடாவுமான மாண்புமிகு எ.வ.வேலு அவர்களுக்கு இந்த மாவட்ட கழகம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டில் தட்கல் முறையில் பணம் செலுத்தி மின்இணைப்புக்காக காத்திருக்கும் விவசாயிகள், சாதாரணமாக மின் இணைப்பிற்காக காத்திருக்கும் விவசாயிகள் என 60ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு இந்த த.வெ.க. அரசு உடனடியாக மின்இணைப்பை வழங்கிட வேண்டுமென இந்த மாவட்டக் கழகம் வலியுறுத்துகிறது.

திருவண்ணாமலை மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட ஊராட்சிப் பகுதிகளுக்கு உடனடியாக 100நாள் வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென சட்டமன்றத்தில் வலியுறுத்திய முன்னாள் அமைச்சரும், கழக கொறடாவுமான அண்ணன் எ.வ.வேலு அவர்களை இந்த மாவட்டக் கழகம் பாராட்டி மகிழ்கிறது. தமிழக அரசு உடனடியாக இதனை நடைமுறைப்படுத்த வேண்டுமென இந்த மாவட்டக் கழகம் கேட்டுக் கொள்கிறது.

சட்டப்பேரவையில் எதிர்கட்சிகளுக்கு பதிலளிக்க முடியாமல் திணறும் த.வெ.க. அமைச்சர்கள், சபையில் குதர்கமாக பேசி குழப்பத்தை ஏற்படுத்துகின்றனர். மக்களுக்கு பணியாற்றுவதற்காக அனுப்பப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், மக்களின் பிரச்சினையை பேசவேண்டுமே தவிர சர்கஸ் கூடாரமாக சட்டமன்றத்தை மாற்றக்கூடாது என இந்த மாவட்டக் கழகம் வலியுறுத்துகிறது.

மேற்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

செயற்குழுக் கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இரா.ஸ்ரீதரன், பொன்.முத்து, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், ஒ.ஜோதி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.சிவானந்தம், ஆர்.வேல்முருகன், கே.வி.ராஜ்குமார், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைசெயலாளர் வ.அன்பழகன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் பிரியா ப.விஜயரங்கன், விஜயலட்சுமிரமேஷ், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன்,

வடக்கு மாவட்ட துணை செயலாளர்கள் ந.பாண்டுரங்கன், க.லோகநாதன், ஜெயராணிரவி, மாவட்ட பொருளாளர் டி.ஏ.தட்சணாமூர்த்தி,

நகர செயலாளர் மு.அன்பழகன், வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், கோ.தனசேகர், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் பி.மனோகரன், ஏ.எழில்மாறன், என்.டி.மனோகரன், எஸ்.எஸ்.அன்பழகன், எம்.சுந்தர், எஸ்.மோகன், து.மாமது, ஏ.ஞானவேல், என்.சங்கர், எம்.தினகரன், ஜெ.கே.சீனுவாசன், ஏ.ஜி.திராவிடமுருகன், சி.கே.ரவிக்குமார், கே.பி.ஆர்.பி.பழனி, சி.ஆர்.பெருமாள், ப.இளங்கோவன், டி.ராதா, ஏ.சுந்தரேசன், கே.டி.ராமசாமி, சு.ராஜ்குமார், இரா.மகேஷ்,

தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, ப.முருகையன், எம்.சீனுவாசன், ஆர்.முருகன், வி.வெங்கடேசன், டி.கே.மோகன், கே.கோவர்தணன், வேணிஏழுமலை, திருவண்ணாமலை மாநகர பகுதி பொறுப்பாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக தெற்கு மாவட்ட துணை செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான மு.பெ.கிரி நன்றி கூறினார்.

### கொள்கைத் தெளிவில்லாத த.வெ.க. அரசுடன்

# தேர்தல் கூட்டணியாக உருவெடுக்க இடதுசாரிகள் உடன்பட வேண்டாம்!

## பொதுப் பள்ளிக்கான மாநில மேடை பொதுச் செயலாளர் பு.பா.பிரின்ஸ் கஜேந்திரபாபு வேண்டுகோள்!

**சென்னை, செப். 7-**

**“கொள்கைத் தெளிவில்லாத த.வெ.க. அரசுடன் தேர்தல் கூட்டணியாக உருவெடுக்க இடதுசாரிகள் உடன்பட வேண்டாம்” என்று பொதுப் பள்ளிக்கான மாநில மேடை பொதுச் செயலாளர் பு.பா.பிரின்ஸ் கஜேந்திரபாபு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கொள்கையில் தெளிவாக உள்ளதாக தனது செயல்பாடுகள் மூலம் மாநிலத்தில் ஆட்சிப் பொறுப்பேற்றக் கட்சி வெளிப்படுத்த முயலாத சூழலில், ஆளும் கட்சியுடன் தேர்தல் அரசியல் கூட்டணி அமைக்க இடதுசாரி கட்சிகளுக்கு அவசியம் எழவில்லை.

இடதுசாரி கட்சிகளின் ஒருங்கிணைப்பை வலுப்படுத்தி, மேலும் சில ஜனநயாக சக்திகளை இணைத்துக் கொண்டு இடது ஜனநாயக முன்னணியாக வலுப்பெறுவதையே மக்கள் விரும்புகின்றனர்.

ஒன்றிய ஆட்சிப் பொறுப்பில் மாற்றம் வேண்டும் என்று அகில இந்திய அளவில் மக்கள் விரும்புகின்றனர். வலுவான அரசியல் கூட்டணியே தற்போது ஒன்றியத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் வலதுசாரி சித்தாந்தத்தை வீழ்த்த உதவும். அதற்கேற்ற தேர்தல் வியூகங்களை அமைக்க வேண்டிய கடமை அகில இந்திய அளவில் இடதுசாரி கட்சிகளுக்கு உள்ளபடியால் தமிழ்நாடு மாநிலத்தில் அதற்கேற்ப முடிவுகள் அமைவது அவசியம்.

**அபாயத்தை உணராத மாநில அரசு!**

தமிழ்நாடு அரசை நிர்வகிக்கின்ற பொறுப்பை ஏற்றுள்ள கட்சி மக்களாட்சி மாண்புகளை காத்திடவும், அரசின் நிதியில் இயங்கும் பள்ளிக் கல்வி, உயர் கல்வி நிறுவனங்களை காப்பதிலும், சமமான கற்றல் வாய்ப்பை அனைவருக்கும் உறுதி செய்யவும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. நிதிநிலை அறிக்கையிலும், துறைசார்ந்த கொள்கை குறிப்பிலும் அதற்கான எந்த அறிவிப்பும் வெளியிடவில்லை. அதற்கு நேர் மாறாக, தற்போது உள்ள பாகுபாடுகளை நிலைநிறுத்தி, மேலும் பாகுபாடுகளை அதிகரிக்கும் வகையில் திட்டங்கள் அறிவிக்கப் பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் திட்டங்களின் விளைவாக, பள்ளி தொடங்கி பல்கலைக்கழகம் வரை மிகப் பெரும் அச்சுறுத்தலை, நாடு எதிர்கொண்டு வரும் சூழலில், இன்றுவரை மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் அபாயத்தை உணரவில்லை என்பதை அவர்களின் அணுகுமுறை வெளிப்படுத்துகிறது.

**இடதுசாரிகள் தெளிவான பதிலை பெறாதது ஏன்?**

செப்டம்பர் 4, 2026 அன்று இடதுசாரி கட்சித் தலைவர்களை சந்தித்த பின்னர் அமைச்சர் ஒருவர் கூறியதாக பத்திரிகையில் வெளியான செய்தியில் வட்டாட்சியர் நடவடிக்கை, உயர் கல்வித் துறை அனுப்பி சுற்றறிக்கை என்ற அளவில் மட்டுமே பேசியுள்ளனர். தலைமைச் செயலாளர் தலைமையில் நடந்த சட்டம் ஒழுங்கு ஆய்வுக் கூட்ட விவாதக் குறிப்பு குறித்து அவர்கள் கவனத்தில் எடுத்து அதன் மீது மக்களாட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் கொள்கை வழிகாட்டுதல் என்ன என்ற தெளிவான பதிலை கூறவில்லை.

விக்சித் பாரத் சிக்ஷா ஆதிஷ்டான் மசோதா, 2025 நிறைவேறி, சட்டம் நடைமுறைக்கு வந்தால் பாதிக்கப்படும் அரசுக் கல்லூரி மாணவர்கள் மிகப் பெரும் போராட்டத்தில் ஈடுபடுவார்கள், அதை தடுக்கவே, ஒன்றிய அரசு பல்வேறு வழிகாட்டுதல்களை மாநில அரசுகளுக்கு வழங்கி வருகிறது என்பதை மக்களால் உணர முடிகிறது.

தமிழ்நாட்டில் ஜூலை 28, 2026 அன்று நடந்த சட்டம் ஒழுங்கு ஆய்வுக் கூட்டத்தில் உயர் கல்வித் துறை, பள்ளிக் கல்வித் துறை, காவல்துறை, மாவட்ட நிர்வாகம் ஆகியவற்றின் கூட்டு நடவடிக்கைக்கு தலைமைச் செயலாளர் வழிகாட்டுதல்களை முன்வைத்து, விவாதக் குறிப்பில் இடம்பெற்றதாக கூறப்படும் கருத்தின் அடிப்படையில் பொதுத் துறைச் சுற்றறிக்கை அனைத்துத் துறைகளுக்கும் அனுப்பப்பட்டதாக தெரியவருகிறது.

**ஆட்சியாளர்கள் வெளிப்படுத்தாதது ஏன்?**

விவாதக் குறிப்பில் இடம்பெற்றதாக வெளிப்படும் கருத்து, மக்களாட்சி மாண்புகளுக்கு முற்றிலும் எதிரானது, அடிப்படை உரிமைகளை மறுக்கும், போராட துணிந்தால் அடக்குமுறை பயன்படுத்த காவல் துறைக்கு முழு அதிகாரத்தையும் வழங்கும் கருத்து.

ஜூலை 28, 2026 நடந்த சட்டம் ஒழுங்கு கூட்டத்தின் விவாதக் குறிப்பு குறித்து மாநில அமைச்சரவை மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன? அரசின் கொள்கை முடிவுகளை மேற்கொள்ள வேண்டிய அமைச்சரவை இந்த விவகாரத்தில் எத்தகைய முடிவுகளை மேற்கொண்டு உள்ளது? என்பதை இது நாள் வரை ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் வெளிப்படுத்தவில்லை.

பல்வேறு துறைகளில் அமைச்சரவையின் அணுகுமுறை கவலை தருவதாக உள்ளது.

மக்களாட்சி மாண்புகளுக்கு மதிப்பளித்து, கூடுதல் எண்ணிக்கை பெற்ற கட்சிக்கு ஆதரவளித்து ஆட்சி அமைக்க வழிவகை செய்வதே மக்களுக்கு மக்களாட்சி மீது உள்ள நம்பிக்கைக்கு வலுசேர்க்கும் என்ற அடிப்படையில் இடதுசாரி கட்சிகள் உள்ளிட்ட கட்சிகள் தங்களின் ஆதரவை வழங்கிட வேண்டும் என்று தேர்தல் முடிவுகளுக்கு பின்னர் பொதுப் பள்ளிக்கான மாநில மேடை கோரி இருந்தது.

தற்போது உள்ள சூழலில், ஆதரவு அளிக்கும் கட்சிகள் அரசியல் கூட்டணியாக உருவெடுக்க வேண்டிய அவசியமில்லை. ஒன்றியத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட அகில இந்திய அளவில் கூட்டணிகள் அமைவது அவசியம்.

இந்திய நாட்டின் ஒற்றுமையையும், விடுதலைப் போராட்ட உணர்வுகளை உள்வாங்கி உருவாக்கப்பட்டு, இன்றுவரை நடைமுறையில் உள்ள இந்திய அரசமைப்புச் சட்டத்தையும் காத்திட வேண்டிய பொறுப்பு விடுதலைக்காக பாடுபட்ட இடதுசாரி கட்சிகளுக்கு கூடுதலாக உள்ளது.

தமிழ்நாடு மாநிலத்தில் அரசுக்கு ஆதரவு அளிக்கும் கட்சிகள் தற்போது தேர்தல் கூட்டணியாக உருவெடுக்க இடதுசாரி கட்சிகள் உடன்பட வேண்டாம் என்று பொதுப் பள்ளிக்கான மாநில மேடை கோருகிறது.

அரசு நிதியில் இயங்கும் பள்ளிகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை முழு கல்வியியல் சுதந்திரத்துடன் இயங்குவதை உறுதிசெய்ய வலுவான மக்கள் போராட்டத்தை இடதுசாரி கட்சிகள் முன்னெடுக்க வேண்டும் என்று பொதுப் பள்ளிக்கான மாநில மேடை கோருகிறது.

இவ்வாறு பு. பா. பிரின்ஸ் கஜேந்திர பாபு தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!




### தலைமைக் கழகப் பிரதிநிதிகள் பி.எஸ்.சீனிவாசன் எம்.எல்.ஏ. – இளமகிழன் முன்னிலை!

# நாகை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என் கௌதமன் அறிவிப்பு!

நாகை, செப்.7–

நாகை மாவட்டச் செயலாளர்கள் என்.கௌதமன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–



நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் 09.09.2026 புதன் காலை 10.00 மணி அளவில் நாகையில் மாவட்ட கழக அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.செல்வம் தலைமையில் தலைமைக் கழக பிரதிநிதிகளான மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பி.எஸ்.சீனிவாசன் எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் இளமகிழன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் மாநில கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வேட்டுக்கொள்கிறேன்

பொருள்: 22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமை செயற்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி கழகம் மறுசீரமைப்பு குறித்து, கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தலைமைக் கழக பிரதிநிதிகள் கோவி.செழியன்-துரை கி. சரவணன் முன்னிலையில்!

# மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., அறிவிப்பு!

மயிலாடுதுறை, செப்.7–

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம். முருகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–



மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற் குழுக் கூட்டம் (09.09.2026 புதன்) மாலை 3.00 மணி அளவில் மயிலாடுதுறையில் தரங்கம்பாடி ரோடு விஜய் மஹாலில் மாவட்டக் கழகஅவைத் தலைவர் கே.ஜி.சீனிவாசன் தலைமையில் தலைமைக் கழக பிரதிநிதிகள் முன்னாள் அமைச்சர் கோவி.செழியன் எம்.எல்.ஏ., மாநில் பொறியாளர் அணி தலைவர் துரை கி.சரவணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்

பொருள்: 1) 22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமை செயற்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி கழகம் மறுசீரமைப்பு குறித்து,

2) கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவு, போர்ட் பிளேயரில் அமைந்துள்ள திராவிட முன்னேற்றக் கழக அலுவலகத்திற்கு நேரில் சென்று, அந்தமான் மற்றும் நிக்கோபார் மாநில நிர்வாகளுடன் இரா.கிரிராஜன் எம்.பி., க.செல்வம் எம்.பி. ஆகியோர் கலந்துரையாடினர். தி.மு.கழக அலுவலக வாயிலில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் அந்தமான் நிக்கோபார் கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர்.